# "புதிய கருத்துக்கள்"

## நூல் 3

## மனித நாகரீகத் தத்துவக் கருத்துக்கள்

எழுதியவர்:

இராம ஜெயபாலன்



இது ஓர் அடிப்படைத் தத்துவ விழுமியங்களை
ஆய்வு செய்யும் ஆய்வு நூல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "புதிய கருத்துக்கள்"

## நூல் 3

## மனித நாகரீகத் தத்துவக் கருத்துக்கள்

எழுதியவர்:

**இராம ஜெயபாலன்**



**இது ஓர் அடிப்படைத் தத்துவ விழுமியங்களை ஆய்வு செய்யும் ஆய்வு நூல்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரிமையுடையது

முதல் பதிப்பு : ஒக்ரோபர் 1996

ஊக்குவிப்பு ரூபா 21 - 00

**இராம ஜெயபாலன்**
இலக்குமிபுரி
கல்லூரி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

பதிப்பு : யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை அச்சகம்,
40/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் உரை

தொடராக என்னால் எழுதப்பட்டு வரும் " புதிய கருத்துக்கள் " நூல் வரிசையில் மூன்று மனித நாகரீக வியல் தத்துவங்கள் என்னும் தலைப்பை தாங்குகின்றது. இருப்பினும் இன்று நாம் காணும் மனித நாகரீக வளர்ச்சி, பல யுத்தங்களைக் கண்டு பல கலாச்சார இணைவுகளின் பாதையில் வெவ்வேறு சமயங்களை யும், சடங்குகளையும், ஒழுக்க நெறிகளையும் கல்வி முறைகளையும், அரசாட்சி முறைகளையும் நடையுடை பாவனையில் வேறுபாடுகளையும் கொண்ட மனித நாகரீக வளர்ச்சி கண்ட குழுமங்களாக இருக்கின்றன. பெரும்பாலும் எல்லா மனிதக் குழுமங்களையும் ஒரு பொதுவான காரண காரியங்களுடே வளர்ச்சி கண்டு வெவ்வேறு கலாச்சாரங்களைக் கொண்டு விளங்கு கின்றன.

நாகரீக வளர்ச்சிப் பாதையையே பெரும்பாலும் கலாச்சாரம் எனக் கூறப்பட்டாலும் புதிய கருத்துக்கள் நூல் சில விளக்கங்களைக் கருத்தில் கொண்டு நூல் மூன்று மனித நாகரீக வியல்த்தத்துவக் கருத்துக்கள் எனவும் தொடர்ந்து வெளிவர இருக்கும் நூல் நாலு கலாச்சாரவியல் தத்துவக் கருத்துக்கள் என்னும் தலைப் புக்களைத் தாங்கி வெளிவர இருக்கின்றன.

மனித நாகரீகம் எனப்படுவது உயிரினம் கூர்ப் பியல் பின் பரிமாற்றத்தால் தேவைகளுடே வளர்ச்சி கண்டு முதன்மை அறிவை ( ஆறு அறிவு ) ப்பெற்ற மனிதன், எவ்வாறு இன்று காணும் சமுதாய அமைப்பு ( கலாச்சாரங்கள் ) உருவாவதற்கு காரணமாக இருந்த தொடர் நிகழ்வுகளை, இலக்கிய, இதிகாச, புராணங்கள் மற்றும் சமயங்களுடே ஆதார தத்துவ விழுமியங்களை இனங்கண்டு முன்வைக்க முனைவதே மனித நாகரீக தத்துவக் கருத்துக்கள் என்றும் இந்நூலாகும்.

இராம. ஜெயபாலன்,
ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| விடயம் | ப. இல |
|---|---|
| 1] தலைமைத்துவமும் இயற்கை சார்ந்து மனிதன் வாழத் தலைப் பட்டமையும் | 01 |
| 2] சுயநலமும் முதலாளித்துவமும் | 01 |
| 3] பொது வழிபாட்டு முறைகள் | 02 |
| 4] பெரு இனப்பிரிவுகளும் நிறப்பிரிவுகளும் | 03 |
| 5] ஆரிய ஆட்சி யுத்தங்களும் உலகம் ஆரிய ஆட்சிக்கு உட்பட்டமையும் | 03 |
| 6] தம் கொள்கைகள் பரவலாக மாற்றமடைய அடிப் படையான ஆரியர்கள் கீழைத்தேசத்திற்குள் ஊடுருவ முன் இருந்த திராவிடர் வாழ்க்கை முறை | 05 |
| 7] ஆரியரின் ஆட்சிச் செல்வாக்கும் இராமாயணமும் | 06 |
| 8] மகாபாரத யுத்தமும் ஆரிய எதிர்ப்பும் | 07 |
| 9] பௌத்தமதப் பரம்பலும் பிராமணர் தனித்தமையும் | 08 |
| 10] மீண்டும் தென்நாட்டில் ஏற்பட்ட இந்துமத மாற் றமும் பாரிய யுத்தங்களும் | 09 |
| 11] இஸ்லாமியர்களின் வருகையும் இந்துக்களின் ஆட்சி அதிகாரம் மாற்றமடைந்தமையும் | 10 |
| 12] இலங்கையில் பௌத்தமத எழுச்சி | 11 |
| 13] சிங்கள மொழித் தோற்றம் | 11 |
| 14] போத்துக்கீச மற்றும் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் வருகையும் இஸ்லாமிய சக்கரவர்த்திகள் ஆட்சி வீழ்ச்சியும் | 12 |
| 15] மீண்டும் ஆரிய ஆட்சி உலகை ஆளத்தலைப்பட்ட மையும் இரண்டாம் உலக யுத்தமும் படிப்படியாக ஆங்கிலேயர் ஆட்சிப்பிடி தளர்ந்தமையும் | 16 |
| 16] அரசவம்சஆட்சி, சோசலிசஆட்சி, இராணுவ ஆட்சி ஓரளவுக்கு வீழ்ச்சி அடைந்தமையும் உலகெங்கும் மக்களாட்சி வந்தமையும் | 16 |
| 17] இலங்கை இந்தியா சுதந்திரம் அடைந்தமையும் மக்களாட்சியும் | 17 |
| 18] வடகிழக்கு மக்கள் தமிழையும் தென்இலங்கை மக்கள் சிங்களத்தையும் தமது மொழியாகப் பெயராகக் கொண்டார்கள் | 18 |
| 19] தமிழ் பிற்பட்ட மக்கள் நாகரீகமடைந்தமையும் வேளாளர் பெரும்பான்மை சாதியும் | 19 |
| 20] கலாச்சாரவியல் தத்துவங்கள் | 19 |
| 21] தெளிவுரையும் விளக்கவுரையும் | 20 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. தலைமைத்துவமும் இயற்கை சார்ந்து மனிதன் வாழத் தலைப்பட்டமையும்

மனிதன், உயிரினத்தோற்றக் கூர்ப்பியல்பு அடிப்படையில் தாவரங்களுட்பட பிற உயிரினங்களையும் தன் இனத்தையும் உணவாக்கியே வளர்ச்சிகண்டு வந்தான் என்பதை கூர்ப்பியல்புத் தத்துவங்களூடாகவும் அறிவுசார் நூல்களூடாகவும், ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்களூடாகவும் அறியக்கிடக்கின்றது இவற்றில் முக்கியமானது மனிதன் மனிதனையே உண்டு வந்தான் என்பதாகும் அத்துடன் மனிதன் முதன்முதலில் பண்டமாற்று வியாபாரமுடான முதல் தொழில் விபச்சாரமே. இத்துடன் மனிதன் பெண்சார்ந்து வாழ்ந்தமையால் முதன்முதலில் உருவான தலைமைத்துவமும் பெண் தலைமைத்துவமே, இத்துடன் [இந்து சமய நூல்களை அவதானிக்கும்போது மனிதன் பல அளவு வடிவங்களில் இருந்திருக்க வாய்ப்பு உண்டெடன எண்ணத்தோன்றுகின்றது] எது எவ்வாறாயினும் இவ்வாறு தலைமைத்துவத்தைப் பெற்ற மனிதன் குழுமங்களாகப் பிளவுண்டு இயற்கை சார்ந்து வாழத் தலைப்பட்டான். அதாவது தமிழ் இதிகாசங்கள் கூறும் முல்லை, மருதம், நெய்தல் பாலை என்பதாகும்.

# 2. சுயநலமும் முதலாளித்துவமும்

உயிரினக் கூர்ப்பியல் பின் பிரகாரம் மனிதன் தன் தேவைகளைப் பூர்த்தி செய்ய சண்டையிடவேண்டிய தேவையேற்பட்டது. இதற்கு முதலாவது காரணம் உடல் இச்சை மற்றையது உணவுத்தேவை. அத்துடன் பிற மனிதக் குழுமங்களை ஆக்கிரமித்து அவர்களுடன் சண்டையிட்டு வெற்றிகொண்டவர்கள். அவர்களின் உடல்களையும் சேமிப்புக்களையும் அபகரித்து பின் தமது வெற்றியை குதிகலிப்புடன் கொண்டாடி மகிழ்ந்து கிடந்தமையே, கூர்ப்பியல்பு காட்டும் ஆரம்ப மனித இனமாகும். இத்துடன் அக்குழுமங்கள் தமதுவேட்டையாடுதலை நோக்கமாகக் கொண்டு தாம் சார்ந்து வாழ்ந்த நிலப்பரப்புக்களை காவல்செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைமை கொண்டாடித் தலைப்பட்டமையுடன் பிற குழுமங்களின் ஆக்கிரமிப்புக்களில் இருந்து தப்பவும் அத்துடன் தாம் யுத்தம் செய்யவும் படைக்கலங்களும், காப்புக் கவசங்களும் வேட்டையாடுதற்குரிய ஆயுதங்களுமாக பல பாவனைப்பொருள்களை மனிதன் உருவாக்கிக் கொண்டான். இவ்வாறு உருவாக்கிக் கொண்ட ஆயுதங்களையும் யுத்தங்கள்மூலம் அபகரித்தும், பறிகொடுத்தும் தமது தேவைகளென்னும் சுயநலப் பாங்கில் மனிதன் நாகரீகமடைகையில், ஆன்மாக்கள் உடல் இளைப்பின் பின்னும் ஜீவிக்கின்றன என்னும் உண்மையை அனுபவரீதியாக அறிந்து இதையும் ஒரு யுத்த ஆயுதமாகவே மனிதன் ஆரம்ப காலத்தில் பயன்படுத்தி வந்தான் என்பதையும் அறியக் கிடக்கின்றது. [கலாச்சாரவியல் தத்துவ நூலில் மேலதிக விளக்கங்களைக் காண லாம். அத்துடன் புவியியல் தத்துவக் கருத்துக்கள் என்னும் இதற்கு முன்வந்த நூலிலும் பல விளக்கங்களைக் காணலாம்.]

இவ்வாறு தன் தேவைகளுடே படிப்படியாக வளர்ச்சிகண்டு வந்த மனிதன் ஆன்மாக்களை தன்வயப்படுத்தி யுத்தங்களையும் வேறு கலைகளையும் செய்யும் ஆற்றல் பெற்றமையால் மனிதன் தம் திறமையின் இரகசியங்களை தமது பிள்ளைகளுடே கடத்த முயன்றமையே குடும்ப ஆதிக்கம் ஏற்படக் காரணமாகும். முதலில் உருவான பெண் ஆதிக்கத் தலைமை தமது பிள்ளைகளை தமது ஆட்சியின் பின் ஆட்சிசெய்ய வழிகோலியமையால், ஆங்காங்கே ஆண் ஆளுமை ஏற்பட்டு தமது தேவைகளின் பொருட்டு பெண்ணை அடிமைகொண்டு தனது தேவைகளை பூர்த்திசெய்ய முற்பட்டான் எனக்கொள்ள இடமுண்டு.

# 3 பொது வழிபாட்டு முறைகள்

வழிபாட்டு முறைகள் தொடர்பாக நூல் இரண்டு புவியியல் தத்துவக் கருத்துக்களும், நூல் நாலு கலாச்சாரவியல் தத்துவக் கருத்துக்களும் கனதியான கருத்துக்களை தருகின்றபோதும், ஆய்வுத் தொடரை பேணும் பொருட்டு வழிபாட்டு முறைகள் குறித்து சில கருத்துக்கள் பின்வருமாறு அமைகின்றது பிரமிட் வழிபாடு. அரச வம்சத்தை நினைவுகூரும் வழிபாடாகும். இவ் வழிபாட்டு முறையுடன் இணைந்து பிறந்தவையே கணிப்பீடுகளும் கணிதவியல் தத்துவங்களும் கிரக வழிபாட்டு முறைகளுமாகும். இயற்கையை மனிதன் அறியவும் அதனை ஓரளவுக்கு கட்டுப்படுத்தவும் ஆன்மீகத்தை இயற்கைக்கு ஒப்பிவந்தமையே. நாள், கோள், தீயபலன் தரும் கிரக வழிபாடு ஆகும். இத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுத வழிபாடு, கோள்வழிபாடு இவ்வாறு பல வழிபாடுகள் மனித நாகரீகத்துடன் பின்னிப் பிணைந்து வந்ததுடன் பிற் காலத்தில் துஷ்டஆன்மாக்களினின்றும் பிற துன்பங்களில் இருந்து மனிதன் தன்னை பாதுகாத்துக்கொள்ளவே திருநீற்று வழிபாடும், சந்தன வழிபாடும், குங்கும வழிபாடும், எண்ணை வழிபாடும் என்பன பிற்காலத்தில் கைக்கொள்ளத் தொடங்கப்பட்டது. இவை ஒவ்வொன்றும் தனித்தனி சமயப் பிரிவுகளுக்கு உரித்து டையவையானாலும் பிற்காலத்தில் கலாச்சார இணைவுகளினால் எல்லாச் சமயப்பிரிவுகளிடத்தும் இது கலந்து காணப்படுகின்றது.

## 4. பெரு இனப்பிரிவுகளும் நிறப்பிரிவுகளும்

வெள்ளையர் இனக்குடும்பம், ஆபிரிக்க இனக்குடும்பம் சீன இனக்குடும்பம், ஆசிய இனக்குடும்பம் என நாலு பெரும் இனக்குடும்பங்கள் இருந்தபோதும் வெள்ளையர் குடும்பத்தில் ஒரு பகுதியினர் தம்மை ஆரியர் எனவும், கறுப்பர் இனக்குடும் பத்தில் சிலர் தம்மை திராவிடர் என இனங்காட்டி நின்றாலும், வெள்ளையர் எல்லோரும் ஆரியர் அல்லர் எனவும், கறுப்பர் எல்லோரும் திராவிடர் இல்லை எனக்கூறினால் அக்கருத்து மிகையாகாது. ஆனால் ஆரிய இனத்தோன்றல்கள் வெள்ளையர் இனத்தில் இருந்தே பிறந்து பிற வெள்ளையர்களையும் ஆக்கிர மித்து திராவிடர்கள் ஊடாகவும் அவ்இனம் ஊடறுந்துச்சென்று இலங்கைவரை தம் ஆட்சியை நிலை நிறுத்தியிருக்கிறார்கள் என்பதை "புதிய கருத்துக்கள்" நூலினூடே முரண்பாடறத் தெளிவுற அறிந்து கொள்ளலாம்.

## 5. ஆரிய ஆட்சி யுத்தங்களும் உலகம் ஆரிய ஆட்சிக்கு உட்பட்டமையும்

வெள்ளையர் இனத்திக் ஆரியர் எனப்படும் இனம், செவ் இந்தியர்கள் என அழைக்கப்படும் வேடுவ இனத்தே ஊடுருவி தம் இனத்தையும் தம் கலாச்சாரத்தையும் ஊடுருவச் செய்தல் மட்டுமன்றி பிறஇனங்களை நாகரீகமடையச்செய்ய தலைப்பட்டது மாத்திரமன்றி உலகத்தை ஒரே குடையின்கீழ் ஆட்சிக்கு கொண்டு வர எண்ணிச் செயல்பட்டிருக்க கூடியளவு வாய்ப்புக்கள் உண்டு என எண்ணத் தோன்றுவது மட்டுமன்றி உலக மனித இனத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே குடையின்கீழ் கொண்டுவர வேண்டுமென்று பிற்கால கொள்கை வகுப்புக்களுக்கும் வித்திட்டது. இந்த நிலைப்பாட்டில் இருந்து யூதர்கள் தப்பிக்கொண்டமையால்தான் இன்றும் யூத ஆரியப் பகைமை காணட்படுகின்றது. இதற்கு ஆளமான சான்றாக யூதர்கள் நிறுவன ரீதியற்ற வழிபாட்டு முறைகளை கையாள்கின்றமை இதற்கு சான்றாகும். உலகத்தை தமது ஆட்சியின்கீழ் கொண்டுவரவேண்டும் என எண்ணிச் செயல்ப்பட்டவர்கள் நிறுவன ரீதியான சமயங்களை தடவசம் வைத்திருந்தவர்கள் எனவும் அல்லது நிறுவன ரீதியற்ற வழிபாட்டு முறைகளுக்கு எதிரான கொள்கையுடையவர்களுமே எனக்கொள்ளலாம இதை ஒரு ஆரம்பகால சோசலிசப்போக்கு எனவும் எண்ணலாம். இறைவன் ஒருவனே என்ற கொள்கையும் இத்தரப்பினர்கொண்ட கொள்கையாகும். இவ்வாறு இவர்கள் சோசலிசப் போக்குக்கொண்ட ஒருவனே இறைவன் என்கின்ற நாகரீகத் தத்துவங்களுடன் தமது மொழியையும் தமது கொள்கைகளூடே பரப்ப முயன்றமையே எவ்வாறு தமது சோசலீச கொள்கை உலகை ஆளவேண்டுமென நினைத்தார்களோ அதேபோல் எல்லோரும் ஒரே மொழியை பேசவேண்டுமென நினைத்தார்கள். இவ்வாறு முயன்றமையால் உருவானதே பல வடிவ எழுத்து மொழியும் மொழியில் பொதுத் தன்மைகொண்ட இலக்கணமும். முதல் ஆரியர்கள் இலத்தீன் மொழியை உத்தியோகபூர்வ அரசமொழியாகக்கொண்டபோதும் பின் ஐரோப்பாவில் ஒரு மரத்தில் இருந்து பூத்ததுபோல் பல மொழிகள் உருவானவையாகும்.

ஆரியர்கள் ஆரம்பகாலத்தில் இறைவன் ஒருவனே எனவும் நிறுவன ரீதியற்ற ஆன்ம வழிபாடுகளுக்கு எதிரான கொள்கைகளுடன் செயல்பட்டு மேலைத்தேசத்தில் யுத்தம் செய்கின்ற காலத்தில் அரசியல் தலைமை மாற்றத்தால் ஓரளவுக்கு கடும் சோசலிசப் போக்கிலிருந்து விடுபட்டு ஆன்ம வழிபாட்டை நிறுவன ரீதியாக ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டு மேற்படி வழிபாட்டை செய்வதற்கு குருமார்க்கங்களை ஏற்படுத்தியது. இதன்போது அவர்கள் மனிதர்களை நாலு வகுப்புக்களாகப் பிரித்தனர். அவர்கள் பிரித்த வகுப்புக்கள் பின்வருமாறு அமையும்.

1) அரசர்களையும் அரச குடும்ப உறவினர்களையும், உயர் பதவி யுக்த வீரர்களையும், பிரபுக்களையும், அவர்கள் குடும்பத்தினரையும், முதலாவது வகுப்பு எனவும்,

2) அரச உத்தியோகத்தர்களையும், மத்திய பதவி யுக்த வீரர்களையும, நுட்பதொழில் செய்வோரையும் அவர்கள் குடும்பத்தினரையும் இரண்டாவது வகுப்பினர் எனவும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) கீழ்மட்ட அரச ஊழியர்களையும், யுத்த வீரர்களையும் கீழ்தொழில் செய்வோரையும் அவர்கள் குடும்பத்தையும் மூன்றாவது வகுப்பு எனவும்;

4) ஆன்மீக சமய வித்தகர்களையும் ( வித்து + ஆககர்கள், வித்தை + அககர்கள் ) துறவிகளையும், போதகர்களை, வணக்கத்திற்குரிய பிரத்தியோக வகுப்பினர் எனவும் நாலு வகுப்பினர்கள் ஆக வகுத்தனர் எனலாம்.

## 6. தம கொள்கைகள் பலவாக மாற்றமடைய அடிப்படையான ஆரியர்கள் கீழைத்தேசத்துக்குள் ஊடுருவ முன இருந்த திரவிடர் வாழ்க்கை முறை :

இம்முறையை தமிழ் இலக்கியங்களே மிக ஆளமாக சுட்டிக்காட்டி நிற்கின்றன. இவற்றுள் முக்கியமானது இயற்கை சார்ந்து மனிதன் குழுமங்களாகப் பிரிந்து வாழ்ந்ததையும், அதாவது மலை மலை சார்ந்து காடு காடு சார்ந்து கடல் கடல் சார்ந்து வயல் வயல் சார்ந்து வாழ்ந்ததையும் அத்துடன் ஒவ்வொரு குழுமங்களும் ஒவ்வொரு குல தெய்வங்களையும் கொண்டிருந்தது மட்டுமன்றி தொழில் ரீதியான பிரிவுகளை மட்டுமே கொண்டிருந்தனர். இதைவிட தொழில் இரகசியங்களை பரம்பரை பரம்பரையாக கடத்திவந்துமுள்ளனர். இவர்களை தலைமை தாங்குபவன் யாகங்கள் பல புரியக் கூடிய ஆற்றல் உள்ளவனாக உள்ளதோடு பல மந்திர தந்திர வித்தைகள் தெரிந்த ஆன்ம வசியம் செய்யும் ஆற்றல் உள்ளவர்களாகவே இருந்தார்கள். இவ்வாறான தன்மை உலகம் முழுக்க இருந்து ஆரியர்கள் என்றும் சொல்லப்படுகின்றவர்களால் வெற்றி கொள்ளப்பட்டு கீழைத்தேசத்துக்கு' பிரவேசிக்க முன், மாலைதீவு, இலங்கை, தென் இந்தியாவின் ஒருபகுதி முருக வழிபாட்டையும், கேரளம் என்று அழைக்கப்படும் மலையாளப் பிரதேசத்தில் மாயவன் வழிபாடும். வட இந்தியப் பிரதேசங்களில் விஷ்ணு வழிபாடும், உஜ்யிணிப் பிரதேசத்தில் காளி வழிபாடுமாக நாகர்கள், யக்கர்கள் என்று அழைக்கப்படும். திரவிட இனத்தவர்கள் பரவலாகப் பரந்து வாழ்ந்த காலகட்டத்தில் இனத்தின் மொழி திரிபடைந்து சமஸ்கிருதம் என்னும் மொழியுடன் கீழத்தேசத் தேசத்தில் திரவிடரை ஆட்சி செய்யத் தலைப்பட்டவர்களே ஆரியர்களாகும். இம் மொழித்திரிபு கீழைத்தேசத்திலேயே ஏற்பட்டிருக்க வாய்புக்கள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. ஆரியரின் ஆட்சிச் செல்வாக்கும் இராமாயணமும் :

இராமாயணத்தை ஆழமாக நோக்கும்போது இராமன் ஆரியனாகவும், அந்தணன் அல்லாத அரச குலத்தினன் எனவும், காட்டப்படுவது மாத்திரமன்றி, கரிய நிறத்தையுடைய திரவிடனாகவும் காட்டப்படுவதால் ஒரு சிறிய ஆரிய இனக்குழுமமே மேலத்தேச செல்வாக்குடன், கிழக்தேசத்தில் ஆட்சி அமைத்து ஆரிய திரவிடம் இரண்டறக் கலந்தமையே இவ்விளக்கப்பாடு சுட்டிக்காட்டி நிற்கின்றது. அது மட்டுமல்லாமல் இராவணன் வீழ்ச்சியுடனும், பிற சுய யாகம் செய்யும் அதி சூரர்கள் (அதிவீரர்கள்) வீழ்ச்சியின் பின், ஆதி அந்தணர்களும் சமஸ்கிருதமொழியும் இணைந்து முனிவர்கள், துறவிகள், ஞானிகள் ஆகியோரின் வழியில் உருவானதே பிராமணர்கள் என்ற இனம் எனவே இவ்வாறு உருவான பிராமணர்களால் புரிந்துரைக்கப்பட்டதுவே வர்ண சாஸ்த்திரமாகும். இவ்வர்ண சாஸ்திரம் நால்வகைப்படும்.

1. **பிராமணர்,** ஆன்மீக சமய வித்தகர்களையும், சமய போதகர்களையும் அவர்கள் குடும்பத்தினரையும் வழிபாட்டுக்குரியவர்கள் என்கின்றபடியால் முதலாவது இடத்திலும்,

2. **சத்திரியர்கள்** அரசர்களையும், பிரபுக்களையும், யுத்தத் தலைவர்களையும் செல்வந்தர்களையும் அவர்கள் குடும்பத்தையும் இரண்டாவது இடத்திலும்;

3. **வைசியர்கள்** நுட்பத்தொழில் செய்பவர்களையும், வாணிபர்களையும் அரச உத்தியோகத்தவர்களையும் மூன்றாம் இடத்திலும்:

4. **சூத்திரர்** அரச ஊழியர்களையும் கீழ் தொழில் செய்வோரையும் அவர்கள் குடும்பத்தினரையும் நாலாவது இடத்திலுமாக வர்ண சாஸ்திரம் வர்ணிக்கின்றது.

இவ்வாறு வர்ண சாஸ்திரம் வகைப்படுத்தப்பட்டாலும், இவை பிறப்பின்பால் தள்ளப்படுவதற்கு தொழில் இரகசியங்களை மறைத்து வைத்த பாரம்பரியமும் குடும்ப வழி செல்லும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி முறையுமே காரணமாகும் இருப்பினும் அறிஞனுக்கும், அழகனுக்கும், வீரனுக்கும், பெண்ணுக்கும் சாதியில்லை என அறநூல்கள் கூறுகின்றன. தஅாவது இவர்கள் திறமையைப் பொறுத்தும் சந்தர்ப்பங்களைப் பொறுத்தும், வர்ண சாஸ்திர படிகளில் ஏறும் வாய்ப்புக்கள் உண்டென இராமயணம், மகா பாரதம் மற்றும் சமயப் புராணங்கள் கூறுகின்றன.

இராமாயணத்தை எடுத்துக்கொண்டு நோக்குமிடத்து இராமனின் தாயாரும், பரதனின் தாயாரும் திராவிடப் பெண் களாகக்கொள்ள இடமுண்டு. ஆனால் பரதனின் தாயார் கேகேய இன்றைய கேரள நாட்டைச் சேர்ந்தவர் மட்டுமன்றி சக்கர வர்த்திகள் அரச குடும்பத்தை சேர்ந்தவள் என்பதால் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வே கூனியின் சொல்லால் அறத்தை மீறி இராமனை காட்டுக்கு அனுப்பவேண்டியேற்பட்டது மட்டுமன்றி வேடுவர்க ளின் மரவுரி உடை அணிந்து தென்னாட்டுக் காட்டுக்கு அனுப் பப்பட்டமையாகும் இங்கே அறம் எனச்சொல்லப்படுவது தர்மம் அதாவது சுயதர்மம் என்று சொல்லட்படுவது வர்ண சாஸ்திரத் தையே இன்நூல் கூறிநிற்கின்றது. அறத்தை சட்டம் அல்லது நீதிகள் என்றும் அழைக்கலாம். அதாவது அரசகுல தர்மத்தின் படி ஒரு அரசன் எத்தனை பெண்ணை மணம முடித்தாலும் அவனுக்கு பிறக்கும் முதல் குழந்தையே அரச பதவியை அலங் கரிக்கவேண்டுமென்பதாகும். இந்நிலை மீறப்பட்டதால் திரா விடர்களின் செல்வாக்கை இராமன் பெற்றது மட்டுமன்றி தென் நாட்டில் பல காலத்தை இராமன் கழித்தது மட்டுமன்றி ஒருவ னுக்கு ஒருத்தி என்ற சமதர்ம சோசலிச பண்பாடு தென்நாட்டில் வேரூன்றி வளர காரணமானான். அத்துடன் ஆதி அந்தண இராவணனை வெற்றிகொண்டு ஆரியரின் செல்வாக்கைப் பெற்றது, ஆரிய திராவிட இணைப்புப் பாலமாக மீண்டும் ஆட் சியை அமைத்துக்கொண்டது மட்டுமன்றி தென்கிழக்காசியா ஒரே குடையின்கீழான ஆட்சிக்கு உட்பட்டது.

## 8. மகாபாரத யுத்தமும் ஆரிய எதிர்ப்பும்

மகாபாரத யுத்தத்தின் சூத்திரதாரி கிருஷ்ணன் என மகாபாரதம் தெட்டத் தெளிவாக எடுத்தியம்புகின்றது. கிருஷ் ணன் மலையாள தேசத்து இடையர் குல யாதோல் இனத்தில் பிறந்தவன் இருப்பினும் இவனின் தந்தையாரின் இரு சகோதரிகள் வட இந்திய உயர் அரச வம்சத்தில் திருமணம் முடிந்தமையால், இவனுக்கு கௌரவர்களும், பாண்டவர்களும் உறவினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவார்கள். இருப்பினும் இவன் பாண்டவர்களால் மதிக்கப்படும், கௌரவர்களால் தூற்றப்பட்டமையால் கௌரவர்கள் பால் வெறுப்பும், ஆரிய எதிர்ப்புணர்வும் கொண்டு செயற்பட்டமை மாத்திரமன்றி தென் இந்தியர்களே தென் கிழக்கு ஆசியாவை ஆளவேண்டுமென்ற திரவிட உணர்வு உந்தலாலும், சிசுபாலன் என்ற வட இந்திய அரச வம்சத்தைச் சேர்ந்த தனது தாய் மாமி மகன் மீது கொண்ட வெறுப்புமே இப்பெரிய யுத்தத்திற்கு காரணங்களென இந்நூல் கருதுகின்றது.

இவ்விடையங்களில் இருந்து அறியக் கூடிய மற்றுமொரு உண்மையென்னவெனில் சக்கரவர்த்தி ஆட்சியை நிறுவிய ஆரிய இனம் படிப்படியாக எல்லா பிரதேசங்களிலும் எல்லா பகுதிக ளிலும் தமது உறவினர்களின் கட்டுப்பாட்டால் ஆட்சிசெய்து வந்தது இவ்வாறு உறவினர்களின் ஆதரவுடன் மத்திய ஆட்சி அமைந்தாலும் யார் மத்திய ஆட்சியை ஆள்வது என்ற பிரச் சனையும், எழுவது தவிர்க்க முடியாததே, இவ்வாறு உறவினர் யுத்தங்களரில் சமஸ்கிருத மொழிப் பேச்சு வழக்கம், மகாபாரத யுத்தத்தின்மூலம் அழிவுற்றது எனவும், கூடிய தனித் வமான வட இந்திய ஆரிய இனம் அழிந்துபோனது என இந்நூல் கருத்துக்களை முன் வைக்கின்றது. இதன்மூலம் மொழிதிரிபு அடைந்தது சமஸ்கிருதம் கிருதம், கிருது ஆகவும் பின் கிருந்தம், கிந்தி எனவும் கிருது உருது எனவும் மாற்றம் கண்டது இன் நிகழ்வுகளூடாக கிருதம் தென் இந்தியா ஆட்சி மொழியாகி தென் இந்தியர்களே வட இந்தியா, இலங்கை உட்பட தென் கிழக்கு ஆசியாவையே தமது சக்கரவர்த்திகள் ஆட்சிக்கு உட் படுத்தினார்கள் இதன்போது மூன்று பேரரசுகள் இவ்வாட்சிக்கு மூலகாரணமாகின. இவையாவன சேர, சோழ, பண்டியர்கள் ஆவார்கள். இலங்கையில் முதலாம் பராக்கிரமபாகு, இரண்டாம் பராக்கிரமபாகு, முதலாம் இராஜசிங்கன், இரண்டாம் இராஜ சிங்கன் என கூறப்படுவபோல் முதலாம் சேர, சோழ, பண்டியன் இரண்டாம சேர, சோழ, பாண்டியன்; மூன்றாம் சேர, சோழ, புாண்டியன் என தொடராக நீண்டகாலம் ஆட்சி செய்து வந் துள்ளார்கள் எனலாம். இலங்கை ஆட்சியாளர்கள் பெயரை மேலே உதாரணங்களுக்காக கூறப்பட்டுள்ள போதும் இலங்கை யிலும் படிப்படியாக இவர்களின் ஆட்சிக் கரம் படியத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. பௌத்தமதப் பரம்பலும் பிராமணர் தனித்தமையும் :

பௌத்தத்தை முதலில் தழுவிக்கொண்டவர்கள் தென் இந்திய கிருந்தமொழி அரசனான அசோகச் சக்கரவர்த்தியே யாகும். இதனூடே மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழியே என படிப்படியாக மதம்மாறிய குறுமன்னர் ஆட்சிகள் தென் ஆசியாவரை பௌத்த மதம் அரசர்களின் உதவியுடனும், துறவி களின் விடாமுயற்சியாலும் பரவத் தொடங்கியது. இம்மதம் ஆசியாவை ஆக்கிரமித்து மேலும் ஆங்காங்கே சென்றிருக்க வாய்ப்புண்டு. இவ்வாறு பரவத்தொடங்கிய பௌத்த மதம் வட இலங்கையை நாகரீகமடையச் செய்தது. இதன்போது கிருந்தமொழி வட இலங்கையை அலங்கரித்தது. மணிமேகலை மற்றும் பல அரச துறவிகளின் பௌத்த மதத் தொண்டை வட இலங்கை பெற்று மலைநாடுவரை பரவியது. இருப்பினும் தென் இலங்கையும், மாலைதீவும் இவர்களின் செயல்பாட்டுக்கு அச்சுறுத்தலாக இருந்தமையால் இவர்கள் பாரியளவு அப்பால் செல்லவில்லை.

## 10 மீண்டும் தென்நாட்டில் ஏற்பட்ட இந்துமத மாற்றமும் பாரிய யுத்தங்களும்

சமயக் குரவர்களின் செல்வாக்கால் சமணத்தையும் அதன் கிளை மதமான பௌத்தத்தையும் தழுவியிருந்த தமிழ் அரசர்கள் (இங்கே கிருந்தமொழி கிருந்தம் தமிழ் ஆக திரிபு அடைந்தது) தமது தனித்த ஆட்சியின்கீழ் தென்கிழக்கு ஆசியாவையே கொண்டு வந்தார்கள். இவர்கள் தமக்குள் பிளவுபட்டும் பல யுத்தங்களை சந்தித்தும் தமிழ் சக்கரவர்த்திகள் இந்து மதத்தை மீண்டும் தென்கிழக்கு ஆசியாவரை தமது ஆட்சிக்குக்கீழ்கொண்டு வந்தார்கள். இவ்வாறு தமிழர்களது ஆட்சி ஓங்கியிருந்தபோதே இலங்கையிலும் அவர்கள் மதமாற்றம் இடம்பெற்றது. இதன் போது மதம்மாற மறுத்த பௌத்த அரசர்கள் மலை நாட்டுக் குள் ஓடி ஒளிந்துகொண்டார்கள். இவ்வாறு இந்துசமயம் தமி ழர்களால் மீண்டும் பரவப்பட்டபோதே இலங்கையிலுள்ள திருத் தலங்கள் பாடல் பெற்றன. மலைநாட்டு ஆட்சி ஆங்கிலேயரின் வருகைவரை வீழ்ச்சியுறாமல் இருந்தமை சாதகமான பிரதேசச் சூழ்நிலைகளே காரணமாகும். இருப்பினும் இந்தியாவில் தமிழர் கள் ஆட்சியின்போது மென்மேலும் இலங்கை நாகரீகமடைந்து மத்திய மலைப்பிரதேசம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் தமிழ் நாகரீகமடைந்து விளங்கியதென்பதற்கு ஆதாரங்கள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. இஸ்லாமியர்களின் வருகையும் இந்துக்களின் ஆட்சி அதிகாரம் மாற்றமடைந்தமையும் :

இஸ்லாமியர்கள் இறைவன் ஒருவனே என்ற கொள்கையும், சமதர்மக் கொள்கையும் உடையவர்கள் அத்துடன் உலகம் பூராகவும் இக்கொள்கைக்கு கீழ்வரவேண்டுமென்ற இலட்சியப் பற்றுள்ளவர்கள், இதேபோலவே இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் ஆரம்பகாலத்தில் ஒரேவித கொள்கைகளை கொண்டிருந்தாலும் பிற்காலத்தில கிறிஸ்தவர்கள் சொருப வழிபாடு செய்தமையால் இருபெரும் பிரிவாகப் பிளவுற்றனர் என்று கூறப்படுகின்றது. இதை ?ட ஒருபடிமேல் போய் ஆரிய இனம் இதே கொள்கையைத் தான் ஆரம்பத்தில் கைக்கொண்டார்கள். எனவும் அவர்கள் யூதர்களுக்கு எதிரான கொள்கைகளை கொண்டிருந்தார்களெனவும்கொள்ள இடமுண்டு. இதன்போது பிறந்தது தான் இந்துமதமும், ஆரியர்கள் என்றால் நல்லர்கள் என்று பொருள்படும் இவர்கள் சமதர்மக் கொள்கைகளையும் நல்வாழ்க்கை முறையையும், பண்பாட்டையும், ஒழுக்க நெறியையும், இறைவன் ஒருவனே என்ற கொள்கை கொண்ட இவர்கள் தமது கொள்கையின் பால் இணைந்து செயல்பட்டாலும் பல இன மக்களிடையே சென்றமையால் மனித இனம் நாகரீகம் பல அளவுத் திட்டத்தில் கூர்ப்பியல்பு அடைந்திருந்த மனிதரிடையே சென்றமையால் கீழைத்தேசத்தில் சமதர்மம் சுயதர்மமாக மாற்றமடைந்தது எனலாம்.

இவ்வாறு கொள்கையுடன் கீழைத்தேசத்தில் தமது நிலைகளைப் பலப்படுத்தியவாறு முன்னேறிவந்த இஸ்லாமிய ஆட்சியாளர் முதலில் கரையோரப் பிரதேசங்களையே தமது இன விருத்தியுடன் தமது மதத்தை பரப்பி வந்தார்கள். இதன்போது மாலைதீவுகள் நிறுவன ரீதியான பௌத்த மதத்திற்குள்ளும், இந்து மதத்திற்குள்ளும் இணையாமல் தனித்து விடப்பட்டிருந்தமையால் இஸ்லாமியர்களின் மத இணைவுக்கு உட்பட்டது. இவ்வாறு சுற்றிவளைத்து இஸ்லாமிய மதம் பரவி வந்தபோது இலங்கையில் ஆட்சிமொழி தமிழாக இருந்தமையால் இலங்கையில் குடியேறிய முஸ்லிம்கள் திரவிட இனத்தில் தம் இனத்தை விருத்திசெய்து கொண்டாலும் தமிழைக் கற்று, இலங்கையில் தமிழ் பேசத் தொடங்கினார்.

இவ்வாறு படிப்படியாக தமது மதத்தை பரப்பிவந்த இஸ்லாமியரின் பிடிக்குள் தென்கிழக்கு ஆசியா முழுவதும் உட்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. இலங்கையில் பௌத்தமத எழுச்சி :

இந்தியத்தமிழ் அரசு தமது செல்வாக்கை இழந்து இஸ்லாமியச் சக்கரவர்த்திகளின் ஆட்சிக்கு உட்பட்டமையால் இலங்கை இந்து தமிழருக்கு உதவி செய்யும் வாய்பை இழந்தார்கள் இதை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு பௌத்த கண்டி இராட்சியம் பலம் பெறத் தொடங்கியது இதன்மூலம் இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் யுத்தங்கள் மூண்டன. இருப்பினும் பௌத்தர்கள் இந்துக்களுடன் முழுமையான யுத்தத்தில் ஈடுபடுவதை தவிர்த்து அவர்களுடன் சமரசம் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டனர் காரணம் தாம் பிளவுண்டால் இலங்கை முழுவதும் இஸ்லாமியர்களின் ஆட்சிக்கு உட்படும் வாய்ப்புக்கள் நிறைய இருந்தமையால் அவர்கள் ஆட்சி மூன்று பெரும் பிரிவுகளுக்குட்பட்டது. கண்டிய இராட்சியம், யாழ்ப்பாணத் தமிழர் இராட்சியம், தென் இலங்கை இராட்சியம் இவைகள் வெவ்வேறு மத ஆட்சிகளாக இருந்தபோது ஒற்றுமையாகவே ஆட்சி செய்து வந்தன.

## 13. சிங்கள மொழித் தோற்றம் :

எவ்வாறு கிருந்தமொழி தமிழாகவும், மலையாள மொழி தெலுங்கு மொழியாகவும், கன்னட மொழியாகவும் மற்றும் பல மொழியாகத் திரிபு அடைந்ததுவோ அதேபோலத்தான் சிங்களமும் கிருந்தமொழியில் இருந்து பிறந்தது எனக்கொள்ளலாம். இருப்பினும் இவ்மொழிவரிசையில் இறுதியாக இலக்கிய வடிவம் பெற்ற மொழி சிங்களமாகும். சிங்கள மொழி ஆரம்பத்தில் சிறுபான்மையாக இருந்தபோதும் இலங்கை சுதேசிய குடிகளான திரவிட இனத்தின் பேச்சுவாக்கு மொழியை கூடுதல் உள்வாங்கி இலக்கியத்திலும் அவர்களை இணைத்து நிறுவன ரீதியற்ற வழிபாடுகளை மேற்கொண்டுவந்த தென்இலங்கை மக்களையும் எதிர்காலத்தில் தம்முடன் இணையக்கூடியதான திட்டத்தில் அவர்கள் மொழிவளத்தையும் இலக்கியத்தையும் ஆக்கியிருந்தாலும் இலங்கை சுதந்திரமடைந்த பிற்பாடு இலவசக்கல்வி முறை மூலமான எழுத்தறிவு அவர்களை மென்மேலும் மொழி ரீதியான இணைவுக்குள் கொண்டு வந்தது பௌத்தமதத்தை பின்பற்றச் செய்தமையாகும்.

சிங்கள இலக்கியமாகிய மகாவம்சம் இலங்கையில் தமிழருக்கு வரலாறு தருகின்ற அதேவேளை சமய சம்பந்தமான போட்டிப் பிரிவினையின் நிமிர்த்தம் விஜயனின் வருகையைகாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மை ஆரியர்கள் என நிலைநிறுத்த முயல்கின்றது. இவ்வாறு பிரிவினையை காட்டிலும் குவேனியின் கதையால் தென்பகுதி மக்களின் உறவையும், விஜயன் பாண்டிய நாட்டில் பெண் எடுத்தான் என்று கூறுகையில் தமிழர்களின் உறவையும் சுட்டி நிற்கின்றது. இதே கருத்தை கூறுபனவாகவே கந்தபுராணம் உள்ளது முருகன் தமிழ் மணக்கும் கடவுளாகவும், தெய்வானையை ஆரியப் பெண்ணாகவும், வள்ளியை திரவிடப் பெண்ணாகவும் காட்டப்படுகின்றது விஜயனின் கதையும் இதற்கு இணையானதே எல்லாளன் ஒரு தலைசிறந்த நீதி தழுவாத மன்னன் என மகாவம்சமே கூறிநிற்கின்றதென்பது மற்றுமொரு சிறப்பம்சமாகும். இதைவிட விஜயன் இங்குவரும்போது பௌத்த மதம் இங்கு இருந்ததாக மகாவம்சம் சொல்லவில்லை விஜயனின் வருகையால்தான் இங்கு ஒரு மனித இன நாகரீக வளர்ச்சி கண்டதாகவே மேலும் அந்நூல் தொடர்ந்து சொல்லுகையில் தொடரான பல ஆரசாட்சிக்குப்பின் தேவநம்பியதீசன் என்பவனாலேயே பௌத்தமதம் இலங்கைக்குள் கொண்டுவரப்பட்டதாக கூறுகின்றது முக்கிய விடையமென்னவெனில் தமிழனின் உறவை பயமின்றி வர்ணித்த மகாவம்சம் இந்துசமயம் என்கின்றபோது மௌனமாகி விட்டது இங்கு சொல்லப்படவேண்டிய உச்ச விடையமென்னவெனில் விஜயன் ஆரியன் தமிழ்பெண்ணை மணந்து' குவேனியை மணந்தும் இரு முனைகளுடே கண்ட உலக மனித நாகரீக தத்துவக் கருத்துக்களையே சொல்லி நிக்கின்ற தென்றால் அக்கருத்து மிகையாகாது.

## 13. போத்துக்கீச மற்றும் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் வருகையும் இஸ்லாமிய சக்கரவர்த்திகள் ஆட்சி வீழ்ச்சியும் :

ஒவ்வொருவர் பின்னாக ஒவ்வொருவர் மூன்று வெள்ளையர் இனமும் மாறி மாறி ஆசியாவை ஆட்சி செய்தமையால், கத்தோலிக்கம், ஆங்கிலேயன், மற்றும் பல கிறிஸ்தவ மதப்பிரிவுகள் ஆசியாவுக்குள் பாவத்தொடங்கின. இங்கே இலங்கை கண்டி இராட்சியம் ஆங்கிலேயரின் ஆட்சியிலேயே வீழ்ச்சி அடைந்த தென்பது குறிப்பிடத்தக்கது. இந்துக்கள் மற்றும் போத்துக்கேய, மற்றும் ஒல்லாந்தர்களிடம் தாக்குப்பிடித்து கண்டி இராட்சியம் இருந்தமைக்கு பாதுகாப்பு மிக்க மலைப்பிரதேசங்களே காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்போல் பெருமளவில் மக்களின் வெறுப்பை ஆங்கிலேயர் கூடிய அளவில் தவிர்க்கும்பொருட்டே பிரித்தாளும் தந்திரங்களை கையாண்டார்கள். இதன்போது இந்தியாவில் பிராமணர்களுக்கு உயர்பதவி கொடுத்து மற்றைய பிரிவினரை அவர்கள்மூலம் அடக்கியாள முயன்றமையாலேயே பிராமண எதிர்ப்பு வாதம் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் தலையெடுத்தது.

இலங்கையில் அரச வம்ச வழிவந்த நிலப்பிரபுக்களாக இருந்த உயர் வம்சத்திற்கே ஆங்கிலேயர் உத்தியோகங்களை வழங்கி அவ் உத்தியோகங்களை குடும்ப வழியில் நடத்திச் செல்ல வழி அமைத்தார்கள். இதைவிட ஆங்கிலேயர் இந்தியாவின் தென்பகுதியூடாகவும் இலங்கையின் வட பகுதியூடாகவும், இலங்கைக்குள் ஊடுருவி வந்தமையால் வட இலங்கையே முதலில் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. இதனால் ஆங்கிலேய நாகரீகம் வட இலங்கையிலேயே கூடுதல் இடம்பெறத் தொடங்கியது அத்துடன் இலங்கையையும், இந்தியாவையும் இணைப்பு பாலமாக தமிழர்கள் இருந்தமையால் ஆங்கிலேயரின் கூடிய செல்வாக்கிற்கு உட்பட்டனர். பிரபல கல்லூரிகள் வட இலங்கையில் ஏற்பட்டது மாத்திரமன்றி, மேல்படிப்புக்கள் தென் இந்தியாவில் இருந்தமையால் தமிழர்கை மீண்டும் ஓங்கத் தொடங்கியது.

ஆரம்ப காலத்தில் திரவிட இனம் இயற்கை சார்ந்து வாழ்ந்தது எனப்பார்த்தோம். இவ்வாறு இயற்கை சார்ந்து எனப்படுவது மலை மலைசார்ந்து, வயல் வயல்சார்ந்து, காடு காடு சார்ந்து வாழ்ந்து வந்த திராவிடன் தொழில் ரீதியான பிரிவினைகளையும் அத்தொழில் இரகசியங்கள் அவர் தமது குடும்பத்துக்குள்ளேயே வைத்திருந்தமை மற்றுமொரு காரணமாகும். இவ்வாறு இயற்கை சார்ந்து வாழ்ந்த திரவிட இனத்துடன் ஆரிய இனம் அந்தக் குழுமங்களின் மேல் நிலையில் தமது குடும்பத்தை நிலைநிறுத்தி அவர்களின் செல்வாக்குபெற்று தாம் கொண்டமொழி நாகரீகத்தையும் சமய நாகரீகத்தையும் பரப்பலாயினர். இந்நிலைப்பாட்டை தொழிலாக நோக்கும்போது ஆரியர்கள் மேல்நிலை அரசாட்சிப் பீடங்களை மட்டும் அலங்கரிக்காமல் தாம் ஒன்றுபட்டிருந்த சமய சார்புக்கொள்கைகளூடாகவும் மொழியூடாகவும் பெருமன்னர்களாகவும், சிறுமன்னர்களாகவும், சிற்றரசர்களாக, பிரபுக்களாகவும், ஊர்பெரியவர்களாகவும் தமது செல்வாக்கை நிலைநிறுத்திக்கொண்டார்கள். இவ்வாறான ஆட்சி முறையை இந்துத் தமிழர்கள் மட்டும் செய்யவில்லை. பௌத்த தமிழர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார்கள். இவற்றில் இருந்து அறியக்கூடிய உண்மையென்ன வெனில், பாரம்பரியமாக இலங்கையில் வாழ்ந்துவந்த திராவிட இனம் சமயப்போட்டி காரணமாக ஆரியத் தமிழர்களால் இரண்டாகப் பிளவுபட்டது எனலாம். இவ்வாறு பிளவுண்ட இனத்தில் பௌத்தர்கள் தமக்கென மொழியை வகுத்துக்கொண்டார்கள். இதேபோல் தென் இந்தியாவிலும், அரச குடும்பத்தினரிடையே எழுந்த போட்டி பொறாமை அவர்களையும் பல மொழிகளாகப் பிளவுண்டு பாரம்பரிய திரவிட பேச்சுவழக்கு மொழியை கூடுதல் உள்வாங்கி தமது பாரம்பரிய இடப்பெயரையே மொழிப் பெயராகக்கொண்டு மொழி வளத்தையும், இலக்கியங்களையும் உருவாக்கியிருந்தார்கள். ஆனால் இலங்கையில் வாழ்ந்த இந்து அரசர்கள் ஈழத்தில் தமக்கென ஒரு மொழி வடிவத்தையோ, இலக்கியத்தையோ ஏற்படுத்தவில்லை. காரணம் தென் இந்தியாவின் உதவி இவ்வரசர்களுக்கு தேவைப்பட்டிருந்தமையே யாகும். இதைவிட ஆங்கிலேயரின் வருகைக்குப்பின் தமிழர்கள் இலங்கை இந்தியாவுக்கு இணைப்பு பாலமாக செயல்பட்டமையால் இந்திய இலங்கை உறவு வலுப்பெற்றதுடன், ஆங்கிலேயருக்கு எதிரான கோசங்களின்போதும் இவ் இணைவு காணப்பட்டது.

இவ்வாறு படிப்படியாக நாகரீகம் கண்டுவந்த இலங்கையில் மீண்டும் இந்து ஆட்சியை பரப்பவந்த தமிழர்கள் வயல் வயல்சார்ந்த பகுதியில் கொய்வித்தியர்கள் என்ற திராவிட இனத்துடன் இணைந்தே தமது செல்வாக்கையும், அவர்களின் செல்வாக்கைப் பெற்றும், தமது இனத்தையும், சமயத்தையும், மொழியையும் பரப்பிச் செயற்பட்டார்கள். அதேபோல் கடல் கடல்சார்ந்த பகுதியில் மேலங்கிக் கரையோர் என்கின்ற ஆரிய அரச குடும்பம் நெய்தல் பகுதியில் தமது ஆதிக்கத்தைச் செலுத்தியது. இவ்வாறு சிறு இனக்குழுமமான ஆரிய இனம் பெரிய இனக் குழுமமான திராவிட இனத்தை ஆண்டது. மேற்படி செயற்பாட்டையே பௌத்த ஆரியர்களும் கைக்கொண்டார்கள்.

இவ்வாறு உயர்வம்சங்களில் இருந்த மக்களையே ஆங்கிலேயர்கள் தமது பிரித்தாளும் தந்திரங்களுக்கு ஆளாக்கினார்கள். ஆனால் இந்தியாவில் பிராமணர்களையே தமது பிரித்தாளும் தந்திரங்களுக்கு கருவிகளாக்கினார்கள். அதாவது செல்வந்த சிறுபான்மையினரைக்கொண்டு பெரும்பான்மை பாமரமக்களை அடக்கி ஆளத் தலைப்பட்டனர் என்றால் அக்கருத்து மிகையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காது. ஆங்கிலேயர் வருகைக்குமுன் தொழில் முறையான பிரிவுகளையும் பதவிவழியான பிரிவுகளையும் கொண்டிருந்த இந்தியப் பண்பாட்டு இனம் நிரந்தர சாதிப்பிரிவினைகளுக்கு அடிமையானது.

இவ்வாறு உயர் வம்சங்களில் செல்வாக்கைப் பெறும் பொருட்டு, போத்துக்கேச ஒல்லாந்தர்களால் இடியுண்டுபோன இந்து ஆலயங்களை மீள அமைப்பதற்கு ஆங்கிலேயர் செல்வாக்கு அடிப்படையில் அனுமதியளித்தார்கள். அதுவரை காலமும் அரிய திரவிட திருமணங்கள், கலாச்சார இணைவுகள், கீழைத்தேச நாகரீக வளர்ச்சியென்பன வெறும் கதையாகவே முடிவடைந்தது. பிராமணர்கள் கட்டுவித்த ஆலயங்கள் வியாபார நோக்கத்திற்காகவும் அரச வம்சத்தினா கட்டிவித்த ஆலயங்கள் தமது குடும்ப வழிபாட்டுக்கு மட்டுமே என்ற தோரணை நிலவத் தொடங்கியது.

இவ்வாறு ஆங்கிலேயர் பிரித்தாளும் தந்திரங்களுடா ஆட்சிசெய்து வந்தாலும் படிப்படியாக அவர்கள் போக்குமாறி ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்தி நாலாம் ஆண்டு அடிமை ஒழிப்புச் சட்டத்தை பிரகடனப் படுத்தினார்கள். இதன்மூலம் தாழ்த்தப்பட்ட மக்களை கிறிஸ்தவர்களாக மதம் மாற்றி தமது சமய ஆட்சிக்கு விஸ்வாசமாக மாற்றி உயர் அந்தஸ்துக்குவர வழியேற்படுத்திக்கொடுத்தார்கள். போத்துக்கேச ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் ஆசியர்களை மணம் முடித்து ஒருவகை கலப்பினத்தை இலங்கை இந்திய மற்றும் பல நாடுகளில் உருவாக்கினாலும் ஆரம்பகால ஆரியரின் வருகை ஏற்படுத்திய பாரிய நாகரீக வளர்ச்சிபோல் இக் கலப்பினம், பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. இவ்வாறு பல காலம் ஆங்கிலேயரின் செல்லப் பிள்ளைகள்போல் இருந்த உயர்வம்சத்துக்கும், ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கிடையே கிறிஸ்தவ மதமாற்ற நடவடிக்கைகளால் பகைமையேற்பட்டது. இந்நிலையும் வெள்ளையனே வெளியே வாதத்திற்கு வித்திட்டது. பிற்காலத்தில் உயர்கல்விக்கு வருவோர் கிறிஸ்தவர்களாக மாறவேண்டுமெனவும் நிர்ப்பந்திக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15 மீண்டும் ஆரிய ஆட்சி உலகை ஆளத்தலைப் பட்டமையும், இரண்டாம் உலக மகாயுத்த மும் படிப்படியாக ஆங்கிலேயர் ஆட்சி பிடி தளர்ந்தமையும் :

கிட்லரின் தலைமையின்கீழ் ஜேர்மனியர் தம்மையே தூய ஆரியர் இனம் என்ற கொள்கையுடனும் ஆரிய இனமே உலகை ஆழவேண்டுமென்ற அவா காரணமாக பெருயுத்தத்தில் ஈடுபட்டு உலகின் பெரும்பாண்மையான நாடுகளை தம் ஆட்சியின்கீழ் கொண்டுவந்த சமயம் சோசலிச ஒன்றியமான சோவியத் ஒன்றி யத்துடன் பெருமோதலில் ஈடுபட்டு அமெரிக்காவின் எதிர்ப்புக் காரணமாக இரண்டு நாடாக உடை புபட்டு ஜேமனியர் கிட்ல ரையும் இழந்தனர். இதற்கிடையில் ஜேர்மனியரின் யுத்தத்திற்கு ஈடுகொடுக்கவேண்டிய தேவை ஆங்கிலேயருக்கு ஏற்பட்டதால், படிப்படியாக அவர்களின் ஆட்சிப்பிடி ஆசியாவில் தளர்ந்து சென்றது. இங்கே முக்கியவிடையம் என்னவெனில் சோசலிச சித்தாந்தம் ஜர்மனியராலேயே முன்வைக்கப்பட்டு ரஷ்சியர்க ளாலேயே பல நாடுகளை கைப்பற்றி ஒன்றியமாக இணைக் கப்பட்டதுவே சோவியத் யூனியனாகும்.

## 16. அரசவம்ச ஆட்சி, சோசலிச ஆட்சி, இராணுவ ஆட்சி ஓரளவுக்கு விட்சி கண்டமையும் உலகெங்கும் மக்களாட்சி மலர்ந்தமையும் :

மக்களே தமது ஆட்சிப் பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டுமென்ற மக்களாட்சி சிந்தனை படிப்படியாக உலகெங்கும் பரவ ஆரம்பித்தபோது ஆரம்ப காலத்தில் எல்லோருக்கும் வாக் குரிமை கிடைக்கவில்லை. இதைவிட மக்களால் தெரிவுசெய்யப் படும் பிரதிநிதிகள் நிறைவேற்று அதிகாரம் அற்றவர்களாகவும் சபாநாயகருக்கு கட்டுப்பட்டு சட்டங்களை இயற்றவும், சட்ட சம்பந்தமானதும் பிறவிடையங்கள் குறித்து ஆராயவும், விவா திக்கவுமே நாடாளுமன்றங்கள் இருந்தாலும் இவற்றை நடை முறைப்படுத்த சபாநாயகர் மற்றும் கவன ஜெனரல் ஆகியோரின் அங்கீகாரம் பெற்று நீதி அரசர்கள் மூலமாகவே மேற்கொள்ளப் பட்டு வந்தது. முப்படைகளும் கவன ஜெனரலின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் நீதி பரிபாலனமே சட்டம் ஒழுங்குகளைப் பரப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரித்து வந்தது. கவனஜெனரலும் மகாராணியாரும் சட்டங்களுக்கு மேற்பட்டவர்கள் எனவும் நிறைவேற்று அதிகாரமிகள் கொண்டவர்கள் எனவும் மதிக்கப்பட்டு வந்தார்கள். இவர்கள் விரும்பின் நீதிமன்றம்முன் தண்டனை பெற்றவர்களாலும் அவர்களை விடுதலை செய்ய முடியுமென்பதாகும்.

## 17. இலங்கை இந்தியா சுதந்திரம் அடைந்தமையும் மக்களாட்சியும் :

பிரித்தானியர்கள் படிப்படியாக தமது காலனித்துவ நாடுகளுக்கு சுதந்திரம் கொடுக்கத் தொடங்கியபோது இலங்கை, இந்தியா என்பன சுதந்திரம் அடைந்தன. இந்தியா தாம் பலம் பெற்றிருக்க வேண்டுமெனவும் ஒற்றுமையாக இருக்கவேண்டுமென்பதைக் கருத்தில்கொண்டு சுயாட்சிமிக்க பல மாநிலங்களாகவும், இந்தியா என்கின்றபோது ஒரு நாடாகவும் தன்னை உருவகப்படுத்திக்கொண்டது. ஆனால் பிரித்தானியாவின் ஆரம்ப காலப் பிரித்தாளும் தந்திரங்களால் முதலாளித்துவவாதிகளான இறுமாப்பு அடைந்திருந்த தமிழ் தலைவர்கள், தமிழர்கள் சுயாட்சிபெற்று சிங்களவருடன் இணைந்து வாழ விரும்பாமல் கீழ்ப்பட்ட தமிழ் மக்களை அடக்கி ஆழவேண்டுமென நினைத்தது மட்டுமல்லாமல் சிங்கள கீழ்ப்பட்ட மக்களையும் அடக்கி மேல்நிலையில் நின்றே ஆளவேண்டுமென மனப்பால் குடித்தார்களே ஒழிய தீர்க்கதரிசன ரீதியில் சிந்திக்கவில்லை. இலங்கை சுதந்திரமடைந்து மக்களாட்சி மலர்ந்தபோதும் குடும்ப ஆதிக்கமும் பரம்பரைப் பணமும் ஆங்கில மொழியுமே நீண்டகாலம் ஆதிக்கம் செலுத்தின. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் சட்டத்தை இயற்றுவதையும் நாட்டின் அதிஉயர்பதியான ஜனாதிபதிப்பதவி கட்சியின் செல்வாக்குக்கு ரணிந்து கையெழுத்து இடும் நபராகவும், நீதிமன்றமே சட்டத்தைப் பேணிப் பாதுகாப்பது மட்டுமன்றி சட்டத்தை இயற்றும் பிரதிநிதிகள்கூட நீதிமன்றுமுன் அழைத்து விசாரிக்கப்படும அளவுக்கு நல்ல சிறப்பம்சங்கள் பொருந்திய சட்டங்களிலிருந்தும் இனங்களின் தனித்துவத்தை பேணக்கூடியதான சுயாட்சித்திட்ட அமைப்புக்கள் இல்லாமல் போனமை மிகப்பெரிய ஒரு குறையாகவே அமைந்துவிட்டது.

இவ்வாறு சிங்களப் பெரும்பான்மை இனம் ஆட்சி அமைத்தபோதும் ஆங்கிலமும் குடும்ப ஆதிக்கமும் ஆட்சிசெலுத்தி வந்தமைக்கு முதலடியாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தமக்கு வேண்டியவர்களை பதவியில் அல்லது தொழிலில் அமர்த்திவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டா முறை கொண்டுவரப்பட்டது. அடுத்த அடியாக தேசிய மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அத்துடன் இலவசக் கல்விமுறையும் கொண்டுவரப்பட்டமையால் படிப்படியாக ஆண்டான் அடிமை சாதிய அமைப்புப்பிடி தளரலாயிற்று. இதைவிட தரப்படுத்தல் (சமப்படுத்தல்) விகிதாசார முறையால் பாமர மக்கள் கை ஓங்கத்தொடங்கியதுடன் பிரதேசரீதியாக பிரிவுபட்டிருந்த தென் இலங்கை மக்களும், மத்திய இலங்கை மக்களும் சிங்களம் என்ற எழுத்து மொழியை கற்று முன்னுக்குவரும் சந்தர்ப்பங்கிடைத்தால் சிங்கள இனம் என்ற பெரும்பான்மை இனம் உதயமாகத் தொடங்கியது.

## 18. வட கிழக்கு மக்கள் தமிழையும் தென் இலங்கை மக்கள் சிங்களத்தையும் தமது மொழிப்பெயராகக் கொண்டார்கள்

இலங்கையில் காணப்பட்ட ஆதியினமான திராவிட இனம் ஆரிய பௌத்தர்களாலும், ஆரிய இந்துக்களாலும் பிளவுண்டு தமிழாகவும், சிங்களமாகவும் மாறுபாடு அடைந்தாலும் காலத்தாலும் இடத்தாலும் மொழி மாறுபடும் என்ற உண்மைக்கமைய சிங்கள இனம் இருபிரிவுகளாக இருந்து முதலாவது மத்திய மலைநாட்டுச் சிங்கள இனம் மற்றையது கரையோரச் சிங்கள இனம். இவ்வாறு பிரதேச வேறுபாட்டுப் பிரிவினையேற்பட்டாலும் தென் கரையோர சிங்கள இனம் தனித்துவமான மொழி இலக்கியத்தை உருவாக்கக்கூடிய நிலையிலும் தனித்து நிற்கக்கூடிய பலமும் இல்லாதிருந்தமையால் எழுத்தறிவற்ற திரவிடர்களும் படிப்படியாக சிங்களத்தைக்கற்று சிங்களமொழி பெரும்பாண்மை இனமாகியது. மாலைதீவு முன்னரே இஸ்லாமியர்களாக மாற்றமடைந்தார்கள் என முன்பு பார்த்தோம்.

இதேபோல தமிழினமும், தனித்துவமான மொழி இலக்கியத்தை ஈழத்திலே பதிவுசெய்யத் தவறியமையால் மகாவம்சம் தந்த தமிழ் வரலாற்றுடன் இந்திய தமிழ் வளர்ச்சி நாகரீகத்தில் தங்கி நிற்கவேண்டிய தேவை ஏற்பட்டது. ஏன்எனில் இங்கு இருமதப்பிரிவுப் போட்டியிருந்தமையே, ஆகவே இந்தியாவில் இடம்பெறுகின்ற எழுத்து மாற்றங்கள் தொடக்கம் சகல மொழி இலக்கிய பரிமாற்றத்தின் தமிழ்மொழி இலங்கை இந்திய இணைப்புப் பாலமாக விளங்கியது. எழுத்தறிவற்ற தமிழகத் தமிழனையும் யாழ்ப்பாணத் தமிழனையும் சம்பாசிக்கவிட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பேசுவது இவனுக்கு விளங்காது; இவன் பேசுவது அவனுக்கு விளங்காது. அதே நிலைதான் முன்னர் மத்திய இலங்கையருக்கும், தென் கரையோர இலங்கையருக்குமிடையில் இருந்ததாகக் கூறப்படுகின்றது. இதற்கு சான்று மாலைதீவு.

## 19. தமிழ் பிறபட்ட மக்கள் நாகரீகமடைந்தமையும் வேளார் பெரும்பாண்மை சாதியமும் :

இந்துசமய பொதுத்தத்துவங்களால் வெறுக்கப்பட்ட தொழிலை கைவிட்டு படிப்படியாக விவசாயத்தில் ஈடுபட்ட மக்கள் இலவசக் கல்வியாலும், தரப்படுத்தல் முறையாலும் உள்ளூர் உற்பத்தி ஊக்குவிப்பாலும் படிப்படியாக முன்னேறி நிலப்பிரப்புக்களின் சொத்துக்களை பகிர்தளிப்பு முறையால் பெற்றும், நீண்டகாலம் குடியிருந்த நிலம் சொந்தமாகும் என்ற அடிப்படையிலும் பொருள்பண்டங்களைச் சேகரித்து முன்னுக்கு வந்தமையால் பெரும்பாண்மை வேளார் இனச் சாதியமரபு வடஇலங்கையில் வளர்ச்சிகண்டு படிப்படியாக கிழக்கு இலங்கைக்கும் தீவகங்களுக்கும் பரவக் காரணமாயின. இதன்மூலம் வர்ண சாஸ்திர முறையில் இரண்டாவது இடத்தில் அதாவது வைசியர் இடத்தில் இருந்த நுட்பத்தொழில் செய்வோர் உட்பட வேளார்களுக்கு கீழ்படும் இரண்டாவது இடமாக கணிக்கப்பட்டமையால், வேளார் எதிர்ப்புவாதம் தமிழர் மத்தியில் தோன்றத் தொடங்கியது. இதன்மூலம் பிரதேச வேறுபாடுகள் வலுக்கத் தொடங்கின. முல்லை, நெய்தல், மருதம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்து வந்த உயர்வம்சத்தினரது எதிர்ப்பையும் கீழ்மட்ட மக்களின் எதிர்ப்பையும் கொண்ட வோர் எதிர்ப்பு வாதங்கள் முன்வைக்கத் தொடங்கின.

## 20. கலாச்சாரவியல் தத்துவக் கருத்துக்கள் :

உலகில் வாழும் எல்லா மனித இனக்குழுமங்களுமே, தத் தமக்கென ஒவ்வொரு கலாச்சாரத்தைக் கொண்டிருக்கின்றன. இங்கே கலாச்சாரம் எனப்படும்போது அவர்கள் வழிபாட்டு முறை, தர்மங்கள் அல்லது அறங்கள் என்று அழைக்கப்படும் நீதிபரிபாலனமும், தேச வழமைச் சட்டங்களும், தேசிய உடைகளும், இசை நாட்டிய பாடல் பாரம்பரியங்களையும் ஒழுக்க நெறிகளையும், பண்பாடுகளையும், கிரியைகளையும் கொண்டிருக்குமென்பதாகும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித இன தோற்ற நாகரீகப் பாதையில் மனிதன் தன் உணவு, உடை, உறைவிடம் எனத் தன் தேவைகளை அறிந்தும் புரிந்தும் இயற்கையிடத்து இருந்து பெற்றுக்கொண்டு வரும் போது யுத்தங்கள் புரிய ஆரம்பித்தான். இவ்வாறு யுத்தங்கள் புரியும்போது தன்னை எதிரிகளிடமிருந்து பாதுகாக்கவும், மிரு கங்களிடமிருந்து தன்னைப் பாதுகாக்கவும் உடற்கவசங்களையும், ஆயுதங்களையும் உருவாக்கினான். ஆரம்ப காலத்தில் தன் தலைக்கவசமாக கொம்புடன்கூடிய மிருகமண்டையோட்டையும், கற்களையும், மிருக எலும்புகளை ஆயுதமாகவும்,

[ தொடரும் ]

## 21. தெளிவுரையும் விளக்கவுரையும் :

புதிய கருத்துக்கள் நூல் மிகவும் வேகமாக தனது கருத் துக்களை முன்வைத்துக்கொண்டு போயிருப்பதை அறிவீர்கள். காரணம் மனித சமூகம்முன் பல தத்துவ ஞானிகளால் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றபோதும் அவை அக்கால கட்டத்தேவையின் நிமிர்த்தமும், காலஓட்ட கலாச்சார இணைவு களாலும் முரண்பட்டுக்கிடக்கின்றன. எனவே மக்கள் மனதில் முரண்பாடுடன்கூடியதாக அவை ஆளமாகப் பதிந்திருக்க நிறைய வாய்ப்புண்டு எனவே மிகவேகமாக பாய்ந்துபோகும் இன்நூல் கள் பிற்காலத்தில் அறிஞர் குலத்தின் சேவைகளால் இவை சனரியான கல்விவள நூல்களாக மாறுமென நம்புகின்றேன்.

இங்கே இருமுரண்பாட்டுக் கருத்துக்களை இன்நூலில் இருந்து சுட்டிக்காட்டப்படுகின்றது. முதலாவது இந்தியாவில் பிராமண எதிர்ப்புவாதம், இலங்கையில் வேளா எதிர்ப்புவாதம். இந்தியாவில் பற்பல பிரிவுகளைக்கொண்ட அந்தணர் குலம் இருக்கின்றது. அதைவிட இந்து சமயத்தின் உட்பிரிவு சமயங் களுக்கு உரிய அந்தணர்களும் இருக்கிறார்கள். இதைவிட பல கிரிகைகளைச் செய்கின்ற இடைநிலை அந்தணர்களும் தாழ் நிலை ஆதிஅந்தணர்களும் உண்டு. இருப்பினும் இவற்றில் சமஸ்கிருத மறைமொழியை மறைவேதங்களுக்காகவும், கிரிகைகளின் நிமிர்த் தம் மட்டும் பாவிக்கும் பிராமணர்கள் முன்னர் அரசர்களால் பயபக்தியாக கௌரவிக்கப்பட்டு உயர்நிலையில் வைக்கப்பட்டி ருந்தபடியால் 'இவர்களே ஆரம்பகாலக் கற்றோராகத் திகழ்ந்து வந்தார்கள். இவர்களே அரச குலத்தினருக்கு ஆய கலைகள் அனைத்தையும் போதிப்பவர்களாகவும், இந்தியாவில் வர்ண சாஸ்திர அடக்குமுறைக்கு காரணமாகவும், இந்தியாவில்உருவான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து நூல்களுக்கு காரணமாகவும் இருந்தபடியால் அறிவியல் கூர்ப்பியல்பு அடைந்து குருகுல அறிஞர்களாகத் திகழ்ந்தார்கள் என்பதனாலேயே ஆங்கிலேயரின் வருகைக்குப்பின் கூடியவள வான பிராமணர்கள் உத்தியோகத்திலும், அரசியலிலும் ஈடு பட்டமையால் பிராமண எதிர்ப்புவாதம் உச்சக்கட்டத்தை அடைந்தது.

ஒளவைப் பாட்டி கூறுகையில் சாதி இரண்டொழியச் சாற்றும் கால் நீதிவழுவா முறையில் இட்டோன் பெரியோன் இடாதோன் சிறியோன் பட்டாங்கில் உள்ளபடி என்ற வர்ண சாஸ்திர மரபைச் சொல்லும்போது அந்தணர்களை சொல்லாமல் விட்டுவிடுகின்றார் என்பதைத் கருத்தில் எடுக்க வேண்டும்.

இலங்கையில் அரச குலத்தினர் படிப்படியாக வேளார் குலத்தில் தம்மை அமுக்கிக்கொண்டபடியால் பெரும்பாண்மை வேளார் குலம் உயர்சாதி அந்தஸ்தைப் பெற்றது வர்ண சாஸ்திர முறைக்கும் பழைய அறநூல்களுக்கும் விரோதமாக இல்லா விட்டாலும், அவர்கள் பிறரை அடக்கி கீழ்நிலையில் வைத்திருக்க முனைவது மிக விரோத செயலாகும். வர்ண சாஸ்திர பட்டாங் கின்படி வேளார் எனப்படுபவர்கள் நாலாவது இடத்தில் அதாவது கடைசி இடமான சூத்திரர் இடத்தில் இருந்தாலும், அவர்கள் பெற்றுக்கொண்ட பணம், அறிவு, வீரம், அழகு நிமிர்த்தம் முன்னுக்கு வருதலை யாரும் தடுக்க முடியாதோ அதேபோல் கீழ் தொழிலையும், அசுத்த செயல்பாட்டை கைவிட்டு தூய்மை யான இந்து சமயத்தை அனுஷ்டித்து பிற தொழில்ரீதிப் பிரி வினரும் மேன்மை அடைந்து ஒழுக்க நெறியின்பாலும், பண் பாட்டாலும் மேல்நிலைக்கு வருதலை யாரும் தடுக்க முனையும் செயல்பாடுதான் இந்து சமய விரோத செயலாகும்.

இருப்பினும் வேளார்கள் பிரதேச வேறுபாட்டால் பிரிந் திருந்த உயர்வம்ச எதிர்ப்பையும் அதேபோல் தாழ்வம்ச எதிர்ப் பையும் எவ்வாறு சந்தித்தார்களோ அதேபோல் பிராமணர்களும் அரசவம்ச உயர் குலத்தினரின் எதிர்ப்பையும், தாழ்இனத்தின் எதிர்ப்பையும் சந்தித்திருக்கிறார்கள்.

வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org